

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (30.8.2024) சென்னையில் நடைபெறவுள்ள ஃபார்முலா ஸ்ட்ரீட் சர்க்யூட் போட்டிக்கான இறுதி கட்ட முன்னேற்பாடு பணிகளை நேரில் பார்வையிட்டார். இந்நிகழ்வின் போது இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, பொதுப்பணித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் சி.சமயமூர்த்தி, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி மற்றும் காவல் துறை உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### சென்னையில் வீடுகளில் நூலகம் வைத்திருப்போர்

# அரசின் விருது பெற விண்ணப்பிக்கலாம்!

## தமிழ்நாடு அரசு செய்தி வெளியீடு!

சென்னை, ஆக.31-

சென்னை மாவட்டத்தில் வீடுகளில் நூலகம் வைத்திருப்போருக்கு விருது பெற விண்ணப்பிக்கலாம் என அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

அது வருமாறு:-

தமிழக அரசு, வீடுதோறும் நூலகங் கள் அமைக்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்தோடு, மாவட்டம் தோறும் புத்தகத் திருவிழாக்களை நடத்தி வருகிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் வீடு தோறும் நூலகங்கள் அமைத்து பயன் படுத்தி வரும் தீவிர வாசகர்களை ஊக் குவிக்கும் பொருட்டு விருது வழங்கப்படும் என அரசு அறிவிப்பு வெளியிட் டுள்ளதால், சென்னை மாவட்டத்தில் வீடுதோறும் நூலகங்கள் அமைத்துச் சிறப்பாகப் பயன்படுத்தி வரும் தனிநபருக்கு மாவட்டங்களில் நடத்தப்படும் புத்தக கண்காட்சியில் சொந்த நூலகங் களுக்கு விருது, ரூ.3,000 மதிப்பில் கேடயம் மற்றும் சான்றிதழ் மாவட்ட ஆட்சியர் தலைவர் அவர்களால் வழங் கப்படவுள்ளது.

இந்த விருதுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர், தங்களது வீட்டில் உள்ள நூலகத்தில் எத்தனை நூல்கள் உள்ளன, எந்த வகையான நூல்கள் மற்றும் அரிய நூல்கள் விவரம் என்பன உள்ளிட்ட விவரங்களுடன், பெயர், முகவரி, செல்போன் எண் ஆகியவற்றைக் குறிப்பிட்டு dlochennai1@gmail.com என்ற இமெயில் முகவரிக்கும், கீழ்க்காணும் மாவட்ட நூலக அலுவலக முகவரிக்கும் விண்ணப்பிக்கலாம் என மாவட்ட நூலக அலுவலரால் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு அரசின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### சீதை பதிப்பகம் வழங்கும்

# ‘இறுதிச் சொட்டு ரத்தமும் இந்திய அரசியலும்’ நூல் வெளியீடு!

## அமைச்சர் மா.மதிவேந்தன் - டி.கே.எஸ். இளங்கோவன் பங்கேற்பு!

சென்னை, ஆக. 31-

சீதை பதிப்பகம் வழங்கும் இறுதிச் சொட்டு ரத்தமும் இந்திய அரசியலும் எனும் நூல் வெளியீட்டு விழா இன்று (31.8.2024-சனிக்கிழமை) மாலை 5.30 மணியளவில் சென்னை அன்பகத்தில் உள்ள அண்ணா மன்றத்தில் நடைபெறுகிறது.

நிகழ்ச்சிக்கு மூத்த பத்திரிகையாளர் கோவி. லெனின் தலைமை வகிக்கிறார்.

கௌரா ராஜசேகரன் அனைவரையும் வரவேற்றுப் பேசுகிறார்.

விழாவில் அமைச்சர் டாக்டர் மா.மதிவேந்தன் கலந்துகொண்டு இறுதிச் சொட்டு ரத்தமும் இந்திய அரசியலும் எனும் நூலை வெளியிட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் டி.கே.எஸ்.இளங்கோவன் பெற்றுக்கொள்கிறார்.

மூத்த பத்திரிகையாளர் தோழர் இந்திரகுமார் நூலை ஆய்வு செய்து சிறப்புரையாற்றுகிறார்.

திராவிட இயக்க ஆய்வாளர் திருவாரூர் அர.திருவிடம் ஏற்புரையாற்றுகிறார்.

நிறைவாக கௌரா ஜெய் கணேஷ் நன்றி கூறுகிறார்.

### வட்ட செயலாளர் எஸ்.பி.கோதண்டம் தலைமையில்

# 142வது“அ” வட்ட செயல்வீரர்கள் கூட்டம்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் சிறப்புரை!

## பகுதிச் செயலாளர் எம்.கிருஷ்ணமூர்த்தி பங்கேற்பு!

சென்னை, ஆக.31-

சென்னை தெற்கு மாவட்டம் - சைதை மேற்கு பகுதி, 142வது “அ” வட்ட தி.மு.க. சார்பில் நாளை (01.09.2024 - ஞாயிற்றுகிழமை) மாலை 6 மணியளவில் சைதாப்பேட்டை பெருமாள்கோவில் தெருவில் உள்ள ஸ்ரீவிஜயராகவலு திருமண மண்டபத்தில் வட்டகழக செயலாளர் எஸ்.பி.கோதண்டம், தலைமையிலும், பகுதி கழக செயலாளரும், பத்தாவது மண்டல குழு தலைவருமான எம்.கிருஷ்ணமூர்த்தி முன்னிலையிலும் மாவட்ட பிரதிநிதி கிண்டி ஆர்.எல்.செல்வம், பொன்ஜெய்சிங், வட்ட அவைத் தலைவர் எம்.சேக்தாவூத், வட்டபொருளாளர் ஆர்.எல்.காந்தன், வட்ட துணைச் செயலாளர்கள் கே.சி.பழனிபாரதி, வீடியோஎழில், பி.தேவிகா, பகுதி பிரதிநிதிகள் எம்.பாலாஜி, பி.வரதன், ஆம்பூர் ரவி, பாரதிபாஸ்கர், பிரபு ஆகியோர் வரவேற்பில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளரும் - மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் பங்கேற்று பல்வேறு கருத்துகளை எடுத்துரைத்து ஆலோசனைகளை வழங்க உள்ளார்.

இக்கூட்டத்திற்கு பொதுக்குழு உறுப்பினர்கள் சைதை மா.அன்பரசன், வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன், பகுதி அவைத்தலைவர் களக்காடி எல்லப்பன், பகுதி துணைச்செயலா ளர்கள் த.சம்பத், ஆர்.ரமேஷ், கவிதாகௌதமன், பகுதி பொருளாளர் வி.பி.ஜானகிராமன், அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் சைதை சாதிக், ந.மணிகண்டன், அஞ்சல்ராமன், கோ.பாஸ்கரன், இளைஞர் அணியின் மாவட்ட துணை அமைப்பாளர் ஆர்.கிருஷ்ணகுமார் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர்.

மேலும் இக்கூட்டத்திற்கு 142வது “அ” வட்டத்திற்குட்பட்ட அனைத்து அணிகளை சார்ந்த நிர்வாகிகள், வட்டசெயற்குழு உறுப்பினர்கள், பாக ஒருங்கிணைப்பாளர்கள், பாக பொறுப்பாளர்கள், பாக களப்பணியாளர்கள், கழக முன்னோடிகள் ஆகியோர் தவறாமல் இக்கூட்டத்தில் கலந்துகொண்டு சிறப்பித்து தருமாறு வட்ட கழக செயலாளர் எஸ்.பி.கோதண்டம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.


